ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இராவணனுக்கு விபீஷண ஆழ்வார் கூறிய புத்தி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 MAY 951
MADRAS

இது
திருவல்லிக்கேணி
தமிழ்ப்பண்டிதர்
T. C. பார்த்தசாரதி அய்யங்கார்
பார்வையிட்டதை,

அமரம்பேடு-இராஜரத்தின முதலியார்
மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1951 [அணா 3.

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

113807

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்
மலர்மகள் விலாச அச்சுக்கூடம்
23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

O-6N,I
N51

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

இராவணனுக்கு
விபீஷண ஆழ்வான் கூறிய புத்தி

காப்பு - வெண்பா

அம்புவியி லின்பசுக மழித்துவரு மீனறிவுந்
துன்பநோய் பாசந் தொலைக்கூற்றம்—வெம்பிபெழ
நற்றவமு நற்புகழும் நற்கல்வி வந்தணுக
கர்த்தனுதி மூலமதே காப்பு.

சிறப்புப் பாயிரம்

பூவுலகில் மஞ்ஞைசிறை விரித்தாடப்
    புதுமைதனைப் புகழ்ந்து நோக்கி
தாவியெழுங் கொசுவதுவுந் தனுகச்
    சிறைவிரிக்குந் தன்மையைப் போல்
தீவதனில் வீடணனு மாக்கதனுரை
    செப்புமுன்னோர் கெளிதாற் கொண்டு
நாவதனுச் சிறிதியற்றிப் பிழைபொறுக்க
    நல்லோர்தா ணுடினேனே.

ஸ்ரீராமர் துதி

சீர்கொண்ட செழுமுடியு ரத்தினவொளி
    மிருமகுடஞ் சிறந்த தோளும்
மார்கொண்ட துளவணியு மதிநுதலும்
    பவளவிதழ் மதுரச் சொல்லும்
கார்கொண்ட வுருவகமுங் கோதண்டங்
    கைச்சிலையுங் கண்டே சீதை
நார்கொண்ட தாரணிந்து பணிந்தபத
    மெனக்கருள நாடினேனே.

அட்டபுவி சூழ்மாந்தர் மதியாலும்
    விதியாலும் மனுகி யுந்தன்
வட்டமலர்ப் பதம்பரவிக் கனிந்திட்டா
    ரவர்கள்மன வாட்ட நீக்கி

கட்டமுதை யுண்டதுபோல் தக்கபடி
யருளீய்ந்து காத்தாய் நாளும்
இட்டவிதி யேதறிவே னுனைப்புகழ
வெனதுவினை தீர்கு வாயே. 2

அண்டபிண்ட மூவுலகு முன்மயமே
யல்லாது வருளுண் டென்று
விண்டமனத் துடையராய் நாகுண்டா
ரொருபொருளை விரும்பி டாமற்
கண்டபடி பேசுமவர்க் கருளேது
பொருளேது காணப் போமோ
பண்டைவினைப் பற்றறுக்க நின்னடியே
தஞ்சமெனப் பாவித் தேனே. 3

பார்தனிலே யவதாரம் பத்தாகப்
புவியோர்க்காய்ப் படைத்து நல்ல
சீருடனே யவரவர்க்கு உகந்தபடி
யருளீய்ந்து செழிக்கச் செய்தாய்
கார்கொண்ட மேனியனே யுனையல்லா
லெனதுபவங் கடக்க வேண்டி
பேர்கொண்ட பலதெய்வர் தொழுதறியே
னுனைப்புகழ்ந்தேன் பேணு வாயே. 4

கலையான நெறிகொண்டு மனத்தினிலோர்
கள்ளமின்றிக் கன்னி மாய
வலையான பெருங்கடலைக் கடத்தியுன்றன்
மலர்த்தாளை வணங்கி யேற்றிப்
பலகாலு நெஞ்சுருகி நற்கீதை
நன்மொழியாற் பாடி யாடப்
பலையேனைத் தடுத்தாள்வாய் ரகுராமா
திருப்பாதம் போற்றி னேனே. 5

த்தியுன்றன் திருவடியை ரகுராமா
புகழ்ந்துமுத்தி நல்க வேண்டி
பத்தியுட னறிவதனுன் மலாதனைப்
பதம்பரவிப் பணியே னுந்தன்
சித்திகொண்ட வடியார்க்குந் தொண்டுசெய்து
சிலதேவற் செய்யே னின்று
புத்திமயக் கிருவினையை யறுக்கவுந்தன்
புகழேதோ பேசி னேனே. 6

...குங் கொடியதுட்ட னின்னருளை
யோராமல் வாழ்நா ளெல்லாஞ்
சஞ்சலமுங் கொடுஞ்சொல்லும் பகைபழியும்
பெருங்கோபத் தவறி னாலுங்
கொஞ்சமதே பெருமூட்டை யறியாமற்
பெற்றதனைக் குறைக்க வேண்டி
தஞ்சமென்றே னழுகவிடா தெனையாள்வாய்
திருப்பாதச் சரணந் தானே. 7

நித்தமுறும் பெருங்கவலை யடியேன்ற
வினைப்பழித்து நீலா வுன்றன்
சுத்தவருட் பதமலரைக் கணந்தேடா
துழல்கின்ற துரும்ப னேனை
நத்தவரும் படியிசைத்து நல்லருளை
யடியேர்க்கு நாட்ட வேதோ
கத்தவன்போல் நின்புகழை யிம்மொழியால்
துதித்துரைத்துக் காட்டி னேனே. 8

ஓராமா ராமாவென வருந்தியே
யோலமிட்டார்க் குதவி செய்தாய்
மாராம லெட்டெழுத்தை யுந்தியுள்ளே
வைத்தவரை வாழச் செய்தாய்
விராக வுனைநினையா விரணியகசி
பனைமாய்த்து விஜயஞ் செய்த
இராமாவே யென்றவனும் பிழைத்திட்டா
னொருவ னம்பி லே...று. 9

திருவணையு மணிமார்பா தசரதற்குப்
பின்செங்கோல் செலுத்தி வீரா
மருமலருன் றாள்சொரிந்தே முடிதாழ்ந்தேன்
வீடணனு மதியால் நாளுங்
குருமொழிபோற் றுணைக்குரைத்தா னெவ்வாதே
பழிசெய்தான் குலமே தீய்த்தாய்
வருமனைத்துஞ் சரிதையென மொழிந்திடுவோர்
துணையாவாய் வாதக் கோவே.

நூல்

மதத்தினால் வ வீரன் மன்னவன் செய்யு நீதி
விதத்தினா லிலங்கை யாண்ட வீடணன் றெரிந்துட் கொண்டு
செகத்தினில் நல்லோர் வல்லோர் தெரிந்திது னிகழ்வ தன்றி
இகத்திற்கும் பரத்திற் கொவ்வா தென்றவன் மொழிந்திட் டானே.

இராவணனுக்கும் விபீஷணனுக்கும் தர்க்கம்

சென்னியில் மகுட மின்ன தெரிவையர் கவரி வீச
மின்னிய மாத ராட மேனகை நடனஞ் செய்ய
துன்னிய வாசன் போற்றத் துலங்கிடு மரக்க னெஞ்சில்
உன்னிய முடிக்க வெண்ணி யுரைக்குரை யோது வானே. 2

விபீஷணன் சொல்லல்

அண்ணலே யெனது வார்த்தை யழித்திடப் போகா தின்று
மண்ணெலா மூந்தி யுள்ளே வைத்தமா லயனு நெற்றிக்
கண்ணனுந் தேவர் யாவுங் கலந்தொரு மித்து யிங்கோர்
பெண்ணதா லரக்கர் வாழ்வைப் பிடுங்கிட வந்தார் காணே. 3

இராவணன் சொல்லல்

எண்ணிய படியே யார்க்கு மிசையுமோ பாரின் மீது
நண்ணியே யயன்மா லென்னை நலிந்திடச் செய்ய வேண்டி
பெண்ணினைக் கானில் விட்டுப் போனவ ரறிந்திட் டாலுந்
திண்ணிய வலியுண் டெல்லாஞ் செயிப்பதற் கேகு வாயே. 4

விபீஷணன் சொல்லல்

வம்பினால் வெவ்வ மென்ற மனத்துணி வோர்ந்தே னண்ணேன்
உம்பர்கோன் போற்ற வாழு மொளிதுள வணியானேந்து
மம்பு ழ னெவருங் கிட்டா ரறிகுவா யிதுவே யுண்மை
நம்பினார்க் கருளும் ராம னிணையடி சேர நாடே. 5

இராவணன் சொல்லல்

ய கணங்க ளெல்லாம் நலமுடன் கூடி துர்க்கை
யே வெருவி யோட மருட்டவே வந்தாற் போலயான்
ய சீதைக் காயென் சேனையு மாய்க்கப் போமோ
ஞ லவரை வாட்கு நல்லுண விருந்து காணே. 6

விபீஷணன் சொல்லல்

நவடி போற்றி நீங்காச் செழிப்புடன் வீற்றி ருந்த
நவடி வுடைய கூந்தற் கன்னியைச் சிறையிற் சேர்த்தால்
ருமொழி மறந்தவர்பாற் குறைசெய்தோன் குலந்தீய்ந் தாற்போல்
ருமொழி தவத்தாற் பெற்ற நல்லர சிழக்கப் போமே. 7

இராவணன் சொல்லல்

சொரிகுழல் சீதை தன்னை யிங்குநான் சேர்க்க வேண்டி
மருமொழி யுரையா னல்ல மாரீசன் றனையி ழந்தும்
விரிமல ரணியுந் தங்கை மூக்கரிந் தவய தித்தும
கரியொளி வனத்தில் வைத்த காதனு யறிகு வாயே. 8

விபீஷணன் சொல்லல்

வஞ்சமா வுரைத்... தெண்ணி மனத்திடை தரித்தா யண்ணேன்
நெஞ்சினிற் பொருந்து நல்ல நெறிபுகல் கொடிய தென்றாய்
பஞ்சையா யிராமன சேனைப் பழுதென வெல்ல வோர்ந்தாய்
அஞ்சவோ வாளி பெற்றிங் கவதரித் தரசர் கோவே. 9

இராவணன் சொல்லல்

அரசனுங் குலத்தில் வந்த வாண்பிள்ளை யாவார்க் கெல்லாம்
உரசுண்டு வீர மூண்டு ஓங்கிய புகழு முண்டு
புரசைபோல் வேரான் றன்னைப் போற்றினீ புகழ்வதெல்லாம்
அரசிலா னென்றே யாங்கு வானர மிகழும் போடா. 10

விபீஷணன் சொல்லல்

வாய்மதம் பேச லாமோ வலுவினல் வெல்லப் போமோ
தாயென வுலகங் காக்குந் தடமுடி ராம னின்று
காயொளிர் தருக்க ளெல்லாங் கணத்துளே யழியச் செய்ய
போயென விடைவா னர்க்குப் பொருமியாங் குரைத்த வாறே. 11

இராவணன் சொல்லல்

என்னைநீ யுரைத்தாய் சற்று மெண்ணுத மொழிய தெல்லாந்
தன்னையே மறந்து சொன்னாய் தயவெல்லாங் கவிழ்த்திட் டாயோ
முன்னையார் மொழியைக் கேட்டு முடுக்கிட வந்தா யின்னே
பின்னைதா னென்று மிங்கே பிதற்றும லேகுவாயே. 12

விபீஷணன் சொல்லல்

தலைவிதி யிதுவோ கொண்ட தாமெலாங் கெடவோ நீண்ட
கலைவிழி யன்னப் பாதக் கருங்குயின் மொழியா டன்னை
சிலையனை யொளித்துக் கொண்டாய் தேறவே சற்றுங் காணேன்
மலையெனச் சிரமு நாளை மண்ணிடை விழுங்கண் டாயே. 13

இராவணன் சொல்லல்

சிரமொரு பத்து மின்றே சிக்கெனக் கொய்ய வேண்டி
உரமிகு மிராம னென்றே டுத்தஞ்செய் வந்தாற் போலும்
வரமுரை யெல்லாங் கெடடு வார்தனையுங் கெட்டு வந்தாய்
நானது வுரையோ சொன்னாய் நன்றுநன றறிவேன் போடா. 14

விபீஷணன் சொல்லல்

...லே மடிவதை யுட்கொள் ளாமல்
உன்கைம்ப ...மபி னாலே யுய்த்திட நினைத்தோ மானால்
பங்கமா முழுதும் ராம பாணத்திற் களித்துப் பொல்லா
சங்கையாய் நரக வேதை தப்பாம லாளு வோமே. 15

இராவணன் சொல்லல்

வகையற மடிந்திட் டாலும் வாழ்வெலாங் கவிழ்ந்திட் டாலும்
பகைபெருங் கும்பன் சித்தன் பலமெலா மிழந்திட் டாலும்
நகைபெறு மாலின் பாதம் நல்கிநீ வாழ்ந்தாற் போதும்
பகையினா லுனக்குத் தீங்கு பாரினி லுண்டோ போடா. 16

விபீஷணன் சொல்லல்

ஆகிய மாலின் கண்ணை யகத்துறு மாசை யாலே
கேயமாய் தனித்து வைத்து நீபெறுங் சாட்சி யென்றோ
சேயையுந் துணையு நல்ல செழுமுடி யரசுங் கீர்த்தி
மாயமா மால்வா ளிக்கே மனதுவந் தளித்திட் டாயோ. 17

இராவணன் சொல்லல்

கலையினை முடித்த நெற்றிக் கண்ணனா ரருளி னாலே
சிலையுடைச் சிறுவன் றன்னைச் செண்டெனக் காத்தி லேந்தி
மலையெறி பந்து போல மாதவர் முனிவர் முன்னே
யலையவே வீசும் போதோ வாண்பிள்ளை யுரங்காண் பேனே. 18

விபீஷணன் சொல்லல்

ஆண்பிள்ளை கீர்த்தி யென்னே யகத்துறு மூரத்தாற் சொன்னாய்
வீண்பிழை யிதெலாங் கொண்ட மேன்மைநான் செலுத்தற் கையங்
காண்பழ வினையோ வன்றி நாமுகங் காஞ்செய் வாரோ
மாண்பெரு வாழு னாளை மாய்த்திட வருந்தப் பாதே. 19

இராவணன் சொல்லல்

மாய்த்திட வருகு முன்னே மனந்துணிந் துரைத்த தெல்லாம்
ஏய்த்திடப் போர்க்குச் சென்று லெந்தன்பின் வருகு வாயோ
காய்த்திடன் வரையொன் றேந்திக் கரியவன் சேனை யாவுந்
தேய்த்திட வுரம துண்டு சிறுமதி யொவ்வேன் போடா. 20

விபீஷணன் சொல்லல்

சேரியி லுள்ள மற்றச் சிறுவரும் வலியுள் ளோரும்
பாரிய சேனை யானைப் பகைபெருங் கும்பன் சித்தன்
கூரிய வுரமு நாளை கோதண்டன் சரத்தின் முன்னே
தேரிநாம் பிழைப்ப தெல்லாஞ் சிறுமதி யென்று காணே. 21

இராவணன் சொல்லல்

ள் சீதைதன்னை யகத்துறு விருப்பாற் சே
மொழியா லந்த நரனிடஞ் சேர்க்கத் தானே
ன்னைத் தேற்றித் திருமணஞ் செய்து காத்தோன்
ரித்த நிந்தை யிருங்கட வுணரச் சொல்லே. 22

விபீஷணன் சொல்லல்

டவு ளின்று தொனிகடல் வைப்புள் ளோரில்
கலனுறு கொடிய தீமை மனத்துளோ ரொருவ ரின்றி
வெல்லுதற் கவத ரித்து மெய்யறி வுளரைக் காக்கக்
கல்லுரு வெழுந்து போற்றுங் காரண மறிந்தி லாயே. 23

இராவணன் சொல்லல்

காரண முடியு மாறைக் கசடரால் நீக்கொண் ணுமோ
நாரண நயனும் போற்றும் நல்லருட் பாத்தின் சேலால்
சீரணப் படுவ தானுற் றேவரால நீக்கோ ணூர்கள்
ஏரணே யேறு மீச னிருபதங் கொள்ளு வேனே. 24

விபீஷணன் சொல்லல்

கருமுடி மௌலி பூண்டிந் நாட்டுளோர் போற்ற வாழும்
பெருமிடி யுடைய வேலை பெற்றிடுங் கோவே கேளுங்
கருவடி யுடையோ னுவி சுற்பினை யவன்பாற் சேர்த்து
திருவடி புகழ நீங்காச் சேரியை யாள்வ னன்றே. 25

இராவணன் சொல்லல்

என்னுட பிறப்பே யிந்த விழியுரை மொழிய வந்தாய்
அன்னையால் காடி முந்தோ நவன்றுணை யான தாலே
உன்னையென் செய்ய வேண்டு முபாயங்க ளனந்தந் தேடு
மின்னையான் விட்டே னுகில் வீரனே நானும் போடா. 26

விபீஷணன் சொல்லல்

ஏரென விருந்த வீர ரென்னல மடைந்தா ரிந்தப்
பாரினில் நன்மை தீமை பகுத்தறிந் தவரு நீரோ
தேரிய மதியைக் கொண்டே செகத்தர சாள்வாய் நன்று
வீரிய வலியாற் றுன்ப வேதைக்குட் படுவோங் காணே. 2

இராவணன் சொல்லல்

படுவது விடுவ தெல்லாம் பாமனு ரருளே யல்லால்
நடுவொ று நன்றுந் தீது நலமுடன் விளைவுண் டாமோ
அடுவது வேண சொல்லி யாயிழை மானு டன்னை
விடுவது குறித்தாய் கொண்ட மென்மொழி யறிவேன் போடா. 28

இராவணனுக்கு

விபீஷணன் சொல்லல்

...யு மாதை வகையிலாக் கபடஞ் செய்து
னைத்... தாரா தேரி லேற்றிக் கற்பினைக் கொண்டு வந்தாய்
சினத்துடன் ராமன் வாளி திடுக்கிட தருகு முன்னே
மனத்துளே வஞ்ச மாயை மாற்றியே யவன்பாற் சே...

இராவணன் சொல்லல்

முழுமதி யுரைத்தாய் தப்பி முனையுள்ள ராம னேனு...
மழுவுமா னேந்து மெங்கள் மகாதேவன வரமெனக்கு
பழுதிலா வருளே யீந்தான் பாரெலா மறிவா ரிப்போ
வழுவுதல் வருமோ நாளு மதியுளா யறிந்து கொள்ளே. 30

விபீஷணன் சொல்லல்

உரமுள புயமும் வேறு முண்டென மகிழ்வுற் றேகாம்
வரமுறை யின்றிக் கண்ணன் மாதினைத் தீண்டப் போமோ
பரசன நிந்தை கூறும் பாவிஎன் னுடன் பிறந்த
தரசனைத் தொட்ட காரி யானையந் தொட்ட வாறே. 31

இராவணன் சொல்லல்

வெட்டுண்டு விழுந்த பின்பு விடுவதே மயிலா டன்னை
மட்டிலா ராமன் பற்ற வருகினும் விடுகப் போமோ
திட்டென விலங்கை மூதூர் செழிப்புட னுள்வா னுனல்
பொட்டென வோடி யாங்கே போருக்கு வரச்சொல் வாயே. 32

விபீஷணன் சொல்லல்

போரென்ன வெளிதோ நாளை பொங்கிவா னரரைக் கூட்டி
காரொத்த குழலிக் காகக் கணையுட னிங்கு நோக்கித்
தூரற்ற மரம்போல் வீழ்த்திச் சுட்டிந்த விலங்கை யோரை
சீரொத்த வன்னத் தாளைச் சிக்கெனக் கொண்டே சேர்வான். 33

இராவணன் சொல்லல்

சிக்கெனக் கொண்டு செல்லச் சிறுவனு மிலங்கை சேர்ந்து
மக்களை மனையை மற்ற மரயெல வலியா ரெல்லாம்
ஒக்கவே மடியச் செய்தா லொப்பிலா னருளாற் சின்ன
சொக்கனைக் கௌவி யேகுங் குறுவலிப் பறவை காணே. 34

விபீஷணன் சொல்லல்

வலிவலி யெனப் புகன்ற மன்னவர் மன்னு கேளாய்
எலியினம் வளையிற் குள்ளே யெண்ணுறு விடும்பு பேசும்
புலியினத் தொழிலைக் கொள்ளும் பூனையின் முன்பு சென்றால்
வலியின்றன் வலியு மன்று வண்மையா யழியுங் காணே. 35

இராவணன் கொல்லல்

அழிந்திடு தற்கோ வீச னன்புடன் மாகு லத்தை
எழுந்திடும் பகைமே லெய்ய வீறுகெட் டழிவா ரென
குளிர்ந்திடு வசனத் தோடு கொடுத்ததென் னருகி ருக்கத்
தெளிந்துரை மொழிய வந்தாய் சிறுவனே யறிவேன் போடா. 36

விபீஷணன் சொல்லல்

சிறியனற் புத்தி நல்ல தெளிவென வுளத்தோ ராமல்
எரியனைத் தீஞ்சொற் சாற்ற வெவர்க்கிது பொருதுங் கண்டாய்
குறியது வனந்தஞ் சொன்னேன் கொள்கையென் றடியேன் மீது
தெரிதாக் கும்பா நீதான் செப்புவாய் செப்பு வாயே. 37

கும்பகர்ணன் சொல்லல்

கும்பனுந் தொழுது ரைப்பான் கோதண்டன் காத்திற் பற்றும்
அம்பதோ கொடிதென் றண்ணே யனைவரும் புகலக் கேட்டேன்
நம்புவா யெனது வார்த்தை நரனென விகழ்ந்து பொலலா
வம்புநாம் செய்து கொண்டால் வாழ்வெலாங் கவிழுங் காணே. 38

இராவணன் சொல்லல்

நப்புமுன் வலியு மிந்த நாட்டுளோர் வலியுங் கொண்டு
தெம்புடன் குரங்கை வெல்லத் தேடுமோ வெனது நெஞ்சம்
வம்புரை சிறுவன் பின்னே மனமொரு மித்துக் கூடி
இன்பமாய் நான்றன் னேவ லிருவரும் புகழ்ந்து செய்யே. 39

விபீஷணன் திரிச்சடைக்குச் சொல்லல்

மானுடன் மருவி வாழும் மதலையென் கண்ணே வாராய்
பானுவு மதியும் போற்றும் பச்சைமாற் றேவிக் காகத்
தானொரு மொழியா லாங்குத் தடம்புயன் மனது கொள்ள
மோனமா யுரைத்தம் மாதை மீட்டிடச் செய்கு வாயே. 40

திரிச்சடைக்கும் இராவணனுக்கும் தர்க்கம்

திரிச்சடை மேவி யங்கே சென்றவ ளரசை நோக்கி
மருப்புக ளொளிரு மார்பா மன்னனே யையா வின்று
கருப்பிலே மிகுந்த மாலின் கறபினைச் சிறையிற் சேர்த்தாய்
நெருப்பைமுந் தாணி யிட்ட நினைவென வறிகு வாயே. 41

இராவணன் சொல்லல்

நெருப்பென வுரைத்த வார்த்தை நிருபன்றன் செவியிற் புக்க
மருப்பொளிர் தடமார் புள்ளே வலவிட முருகி யோடி
சருக்கென வெகுண்டு நீலி துடுக்குரை மொழிந்தா யின்னே
கருக்கெனும் வாளால் வென்று கனமுடன் வாழ்வேன் போடி. 42

திரிச்சடை சொல்லல்

... யுண்டு மாசற நீதி யோடே
...டே யுலகோர் போற்ற தருமனென் றுரைப்பர் வானோர்
...ழந்திடப் புகழுங் கொள்வாய் துடியிடை மயிலா டன்னை
வாழ்ந்திடச் சிறையை நீக்கி மாதவன் பக்கஞ் சேரே. 43

இராவணன் சொல்லல்

சிறையினை விடுக வேண்டிச் செப்பினை ரனந்த முண்டு
கறையிலா நெஞ்சை யோர்ந்து கனிந்திட மொழிய வந்தாய்
நறைமலர் சூடி வாழ நக்கன்றன் விதிபொய் யாமோ
தரையுறை மாந்தர்க் கிட்ட தரம்வழு வாது காணே. 44

திரிச்சடை சொல்லல்

தரைத்திரு வாசர் நீதி தப்பியே சிறைசேர்த் தக்கால்
எரைக்கது ராமன் வாளி யெங்கெனத் தேடிச் சூழும்
உரைத்திட்ட மொழிகள் சற்று மொவ்வாத வார்த்தை யென்றே
யுரைத்திட்ட மன்ன பின்னுஞ் சொல்லுவேன் சொல்லு வேனே. 45

இராவணன் சொல்லல்

பிள்ளை தன் மதியுந் தன்னைப் பெற்றவன் மதியு மோர்ந்தேன்
எள்ளள வரையிற் குற்ற மெல்லையில் மொழியப் போமோ
கள்ளியுன் றந்தை நீயுங் கலந்துரை யாடி மாதைத்
தள்ளிட வுரைத்தாய் வாளாற் றறிப்பன னேகு வாயே. 46

விபீஷணன் சொல்லல்

முத்தனும் பரம யோகி மூன்வா மளித்த தண்ணேன்
தப்பிலா தாள வேண்டிச் சமர்த்துடன் கைக்கொண் டிந்தத்
துர்க்குணங் காமத் தாசை துர்த்தனஞ் செய்ய வோர்ந்து
உர்ப்பன மூவர் கூடி யோருரு வான வாறே. 47

இராவணன் சொல்லல்

ஓருரு வான தெல்லா முன்மட்டு மறிந்தா யிந்தப்
பாருக்கு ளொருவர் காணார் பரமனா ருளை யெல்லாங்
காரொத்த குழலா டன்னைக் கரிவனஞ் சிறையை நீக்காச்
சீரொத்த ராமன் வார்த்தை திறமென மொழிந்தாய் போடா. 48

விபீஷணன் சொல்லல்

எண்ணுக்கு முடிவுண் டாமோ விருமுடி யரசே கேளாய்
மண்ணைத்தா னுண்ட மாலின் மடமயில் கற்பை நோக்க
விண்ணைத்தா னுளுங் தேவ ரிருமில வீரர் யாரு
வெண்ணாந்தான் குலைந்து பொல்லா விருநர குறுவர் காணே. 49

இராவணன் சொல்லல்

பண்டுசெய் யரத்தா லீசன் பரிவுட னளிக்கப் பெற...
கொண்டதோ ரருளே யோரக் குறையெனச் சிறுவன் ...
பெண்டதால பிறவிக் கென்றும் பெரும்பழி தேடி யாங்கே
யுண்டென நலமும் வாழ்வு முபசரித் துதித்தாய் போடா. 50

ஸ்ரீராமர் இலட்சுமணருக்கு சொல்லல்

கரிபரி சேனை யற்றைக் காவல ரூரமும் பொல்லாப்
பெருமுடி நீண்ட கையாற் பொங்கிய மூல முள்ளான்
றெரியென விபீஷணன் சொல்ல க்ஷணத்திலே பொடிநீ றாக்கிச்
செருவிடை மயிலை மீட்காத் திறமென்ன விளையச் செப்பே. 51

இலட்சுமணர் ஸ்ரீராமருக்கு சொல்லல்

எழுகடல் நடுக்கப் பெற்ற விணையிலாக் கோதண் டண்ணு
வழுவிலலா வீர சேனை வம்பனுங் கும்ப முற்றும்
மழுங்கிட கடிகை யுள்ளே மாய்த்துநன் மதியா னுள்ளம்
புழுங்கிட வாசு நாட்டிப் பூவையை மீட்பேன் காணே. 52

இதுவுமது

காணவே முனிவர் தேவர் கலங்கிட நிமிஷத் துள்ளே
வீணதாய்ப் பிடித்தி லங்கை வெறுநில மாக்கிப் பின்னும்
ஈணுவே னென்னக் கேட்டே யெழுந்தவன் றாளில் வீழ்ந்து
பூணவே யிளையோன் பின்னும் பொறுமென வாற்றிச் சொல்வான்.

இதுவுமது

அனுமனை யனுப்பி யாங்கே யரக்கர்தம் மெண்ண மெல்லாம்
மனதினு லறிந்தே யெந்தாய் மாதையுங் கண்டு யிங்கு
கனமுட னுரைக்கப் பார்த்துக் கணத்துளே சென்று வெல்வோம்
இனமினி யனுப்பு மென்ன விளையவன் புகலக் கேட்டான். 54

அனுமான் சொல்லல்

எண்டிசை யதிரக் கண்ண னிருபதந் துதித்துப் பொங்கி
சண்டமா ருதம்போற் கண்ணிற் றணலெழ வனுமா னேங்கி
கண்டகர் தமையு மாய்த்துக் கன்னியை நிலத்தோ டேந்தி
வண்டனை வாலிற் கட்டி வருவனென் றுரைக்கக் கேட்டான். 55

அங்கதன் சொல்லல்

எங்கணு யகனை யாங்கு விடும்புசெய் யரக்கர் வாழ்வைப்
பொங்கமாய் நீறு செயயப் பொருவிலங் கதனே நாளுஞ்
...ங்கம்போ லருகி ருக்கச் சிந்தையிற் பலவா யெண்ணி
...ங்குவ தென்ன வாலி மைந்தனுக் கருள்செய் வீரே. 56

இ... னுக்கு

ஸ்ரீராமர் சொல்லல்

... போது மங்குள்ள யானை சேனை
... சித்தன் கும்பன் தாழ்விலா மூலம் யாவும்
துணிவுளாங் கோதண் டத்தாற் றீய்த்திடத் துணிவே னின்று
கனிவுள விபீஷ ணன்சொல் கண்டுபின் செய்ய நன்றே. 57

விபீஷணன் இராவணனுக்கு சொல்லல்

இப்படி பலவா றோங்க விருந்தன னயோத்தி வேந்தன்
தப்பிலா துரைக்கும் வீட ணன்றுயி லறிந்து பொல்லா
முப்புர மழிந்தாற் போல் விலங்கையோர் முழுதுந் தீய்த்து
வற்புத ராமன் வெற்றி பரக்கனுக் குரைசெய் வானே. 58

இதுவுமது

என்மொழி யண்ணு கேளு மிராமனோர் தூத னானை
உன்மொழி யறிய வேண்டி யுகந்தவன் வருதற் கண்டான்
நன்மொழி யாலே நாமு நயம்பெற வுரைத்து வாழ்த்தக்
கன்மமு மகன்று நல்ல கதியுடன் வாழ்வோங் காணே. 59

இதுவுமது

சம்புவ னெருநா ளந்தச் சலம்படிக் கரவுங் கூடி
முன்புநே சித்துப் பற்றத் தன்னினை முண்ணு மென்ன
வம்பரி தனக்குச் சொன்ன வண்மையா லசைவு நோக்கி
சம்புவே யெனைம ருட்டுந் தகையென வோர்கு வாயே. 60

விபூஷணன் சொல்லல் - வேறு

அண்டமுற் றுங் காத்தளிக்கு மையனருள் பெற்றதொரு
மண்டோ தரியைவைத்து மாதவன் றேவியினை
கண்டறிந்து தீண்டுதலாற் கற்புகொந்து நாளையிந்த
மண்டலமுந் தமிழந்து மாளுயவகை யோராயே. 61

இராவணன் சொல்லல்

மடிவதனை யோர்ந்தயனுர் வைத்ததனை நீயேகி
சடுதியினி லவ்விதியைத் தட்டழிக்கக் கூடுமோசொல்
முடிவுபெறு வார்த்தையினி முட்டிமுட்டி முன்னுரைத்தால்
அடிபடச்செய் தோர்ந்திடுவை யவ்விடத்தி லேகுவையே. 62

விபீஷணன் சொல்லல்

அவ்விடத்து நல்வாழ்வை யழித்துமுன் னருகில்வந்து
எவ்விதத்தில் கிட்டுவர்யா ரிம்மொழியை நீதடுத்தால்
பவ்வமுண்டு தீமையுண்டு பததினியின் சாபமுண்டு
எவ்வழியில் நீதுலைத்தே யீடேறக் காண்பனே.

…பீஷணன் சொல்லல்

…தினை… பற்று னிருபதம் புகழ்ந்தா…
…த்தியு மளித்துக் காக்கு முகுந்தனை யிழிவா யெல…
வெற்றியும் பலமும் பெற்று மேன்மையுந் துடைத்து…
சத்தியஞ் சொன்னே னுனைச் சமரினி லறிகு வாயே.

இதுவுமது

காதலி தவத்தைக் கோறி காட்சியோர் மகவை யீன்று
ஏதமில் வளர்த்து வந்த விடர்களுந் தொலைத்துக் காக்க
சீதனத் தோடு மாற்றான் றிண்புய மணைங்கெதன் னுளும்
போதநற் சுகத்தை யீயும் பேதமை யிதற்கொவ் வாதே. 100

113801

தாற்பயன்

வெற்றிசே ரிராமன் வாளி விலக்கிட வேண்டி விபீஷணன்
பத்தியாய் தமய னுக்குப் பாங்குட னுரைத்த வார்த்தை
புத்தியாய் மனங்கொ ளாமற் போரினிற் பட்டு பின்பு
நித்திய சொரூபன் பாதம் விபீஷண னடைந்திட் டானே. 1…

தற்சிறப்புப் பாயிரம்

மேயனுள் முன்னோர் சொன்ன வீடணன் புத்தி தன்னை
நேயமாய் மேலு வாழ்த்தி விருப்புட னெழுதி யப்பால்
பாயிரம் பத்துஞ் செய்தேன் பரகதி யடைய வேண்டி
தூயசொற் குற்றந் தீர்த்தார் துணையடி பணிய வல்லேன். 102

வாழி

மாதவர் முனிவர் யோகி மழுவர னுமையும் வாழி
வேதநா லுடைய வையன் மேன்மொழி கலையும் வாழி
சீதவ முதித்த பொன்னுள் திருவணை மாலும் வாழி
காதலா லுரைத்தோர் கேட்டோர் களிப்புற வாழி வாழி. 103

இதுவுமது

சீ… புகழ் வீடன் காதை செழிப்புடன் மனம கிழ்ந்து
…ர்புகழ் சென்னை தன்னில் பண்பொடு அச்சி யற்றும்
…ர்புகழ் வச்சுக் கூடத் தலைவரும் வாழி வாழி
…ர்புகழ் பல்லோர் போற்றி மகிழ்வதாய் பதித்த வாறே. 1…

இராவணனுக்கு

விபீஷண ஆழ்வான் கூறிய புத்தி

முற்றிற்று.

இராவணன் சொல்ல

...ல வாளும் நானே யிந்த
...ரல்லா லெவருண்டு முன்னும் பின்னும்
...றுங் காக்கும் பரமனை யன்றி வேறு
...கரிதா மந்த சொருபத்தை யறிகு வாயே. 92

விபீஷணன் சொல்லல்

அறிந்தறிந் துரைத்த தெல்லா மசடென மொழிய வந்தீர்
பரிந்திடு மிராமன் வார்த்தை பழியெனச் சொல்ல வந்தீர்
முரிந்திடச் செய்யு மந்த முனைபெறும் வாளிக் கையோ
எரிந்திடு மனதிற் றொவ்வா யேழமை யென்சொல் வேனே. 93

இராவணன் சொல்லல்

ஒவ்வாத வார்த்தை மெத்த வுரைத்திட வோரி புல்லைக்
...வ்வாது புலியுங் கேட்டுக் கனைத்தெழும் வாறு போல
...வ்வாத மொழியா லென்னை யிசைத்திட வெண்ணிச் சொன்ன
...வாறு சிங்கம் போலென் னுண்மையின் னறிகு வாயே. 94

விபீஷணன் சொல்லல்

...ற்காலத் தரனுர் பெற்ற முழுவரங் கவிழ்க்க வேண்டி
தற்காலப் பிரக லாதன் சாற்றிய மொழியிற் கொவ்வா
தெக்கால நடந்த கீர்த்தி யிரணிய னிழற்ற மூலம்
கைக்காலங் கண்டு மாயோன் மார்பலந் தெரியக் காணே. 95

இராவணன் சொல்லல்

எத்தனை விதத்தால் நீயு மின்புற வாழ்த்தி யோய்ந்த
பத்தியாற் றொழுது கொள்ளும் பயனது நானே காணேன்
அத்தியை யுரித்த மூர்த்தி யவனளிக் கொள்ளாப் போதம்
சத்தெழுங் கடலுங் கங்கா சலமென வகுக்க லாமே. 96

விபீஷணன் சொல்லல்

நிகரில்லா வாலி வானி லனேசனுள் ளெக்குண் டாகி
தவறுற்றுக் கிடந்த திண்மை சற்றுநீ மீளக் காணேன்
...ரைசெறி துளபன் வாளி மேய்ந்திட வவனும் பட்டான்
...ரைவரும் பருந்துங் குஞ்சும் போலென வெலிகு வாயே. 97

இராவணன் சொல்லல்

முன்வலி யுடையோர் வார்த்தை மொழியவோ திறவா னல்லன்
தன்வலி கொண்டு மாற்றான் றனையடக் கிடவும் போரான்
...ன்... ...வா துரை செய்ய வல்லான்
... 9...

விபீஷண சொல்லல

கூற யெல்லாங் கோவேநீ சற்று
தேரிய ான் சொல்லச் சிற்றுரை பொவ்வா
பாரிய பழியைப் பெற்றுப் பாரைநா மாள வெண்
ஆரியன் பொறு பா வேனு மம்புமுன் வருங்கண்

இராவணன் சொல்லல்

அம்பது வுரமோ மெத்த வதைத்தெரி நானே சுற்றன்
தெம்புடன் வாளி யேந்திச் சிறுவனுஞ் சுக்ரீவற் காய்
முனபுநில் லாம லோடு முழுமையு மொளித்து வாலி
தென்பிலா தோயக் கண்டு சிறுகணை யெய்தான் போடா. 86

விபீஷணன் சொல்லல்

கணையது வலியுங் கொண்ட காகுத்தன் வலியு முன்போற்
பிணையிலாக் கவந்தன் கைக்கு ளிருவரும் பிடிபட் டாங்கே
துணைவனை நெருக்க நோக்கித் துளபனும் வாளி யெய்யப்
புணைபெரும் வரைபோல வீழ்ந்த புதுமைநீ யறிந்தி லாயே. 87

இராவணன் சொல்லல்

உடற்பிறப் பில்லாத் தேக முடன்பிறந் தழியு மென்னத்
தடற்புவி முன்னோர் வாய்மை தப்பிலா துரைக்கப் பார்த்தும்
சிறைக்கிடு மாதுக் குந்தன் சிந்தைதாள் பொறுது வாளி
இறைக்கிடா வகந்தா னென்னை யீதுப காரங் காணே. 88

விபீஷணன் சொல்லல்

காணாத தீமை யுன்றன் கண்களி கூர்ந்துன் னெஞ்சந்
தோணாது பெற்ற கன்மஞ் சொல்லுதற் கெளிதோ யின்று
பேணாது பேணப் பெற்ற பெருமையு மிழந்து வுன்னால்
வாணாளை வாட்டும் ராமன் வாளியா லிறப்பா யண்ணே. 89

இராவணன் சொல்லல்

சொல்லுரை நிறுத்து மந்த சுத்தனே வீர னன்றி
நல்லுரை யுன்னாற் கொண்டு நடத்திடக் கோழை யாகும்
வல்லுரை மாப லத்தால் மடிதலே புகழுங் கீர்த்தி
சில்லுரை யாவி போக்கத் திரியுல கேய்க்கும் போடா.

விபீஷணன் சொல்லல்

இகழோடு வச்ச நாண மிரும்பழி யகற்றி நல்ல
புகழ்பெறு முத்த மர்க்கே பொருந்திடு முறைமை யென்பார்
பகைபெறும் பழியைக் கொள்ளல் ண
வகையு வர் செய்

...கூறி...

இராவணன் சொல்லல்

...பற்ற சேவக னிருவர் தம்மை
...ா டன்னை யிங்குனுன் சேர்த்தேன் முற்றும்
...ந் தந்த மதியணி யருளுண் டென்றும்
...பாசே னெந்தன் றிறமினி யறிகு வாயே. 78

விபீஷணன் சொல்லல்

அரக்கரை வென்று கானி லட்சதர்க் கலியை நீக்கி
துரைத்தனஞ் செய்ய வந்த சுடர்மணி வலுமை தன்னை
திரத்துட னறிந்தா யில்லை செப்பினுங் கேளா யுன்றன்
காத்தினி லெழுது மந்த திசைமுகன் காம்பொல் லாதே. 79

இராவணன் சொல்லல்

பொல்லாத பிரமன் செய்த மதியென்ன புகலு வேனே
வல்லான வெனது பிள்ளை வகையிலாக் கோழை யுன்னை
சொல்லாது விதித்த வாறே துரோகியாய் நாருக் கஞ்சி
யெல்லாரும் பழிக்க விந்த வேழமை கொண்டாய் பின்னே. 80

விபீஷணன் சொல்லல்

...மை கொண்டு ராம னிணையடி பணிந்தார் தம்மை
...ழமை யிருளாச் செய்து பற்றிடுங் கலியை நீக்கி
தாழமை யுலகோர் போற்றத் தாணியைக் கொள்வா ரிந்த
ஆழமை யிருந்தா லென்று மழித்திடு மாசர் கோவே. 81

இராவணன் சொல்லல்

அரசரோ முனைபி னின்று அடிபெறு வாளி யேந்தி
உரசுடன் பகைமேல் வீழ்ந்து வுயிர்கொடுத் திடுவ தன்றி
தரமிலாச் சிறுவ னுக்குத் தாழ்ந்துரை செப்ப வானாய்
அரமிலாத் தன்கை வாளா லவருயி ரிழப்பர் காணே. 82

விபீஷணன் சொல்லல்

எத்தனை யாண்டாண் டாக விருக்கினு ஞாலந் தன்னில்
பத்திரு வினையால் மேவும் பாழுட லென்றும் பாழே
...று யிருந்தே மேலாஞ் சுகத்தின்வா ழெவர்க்கு நன்று
... மாதா விந்த நற்குல நாசங் காணே. 83

இராவணன் சொல்லல்

அம்புலி பனியை பெற்று னலைகடு விஷத்தை யுண்டான்
...ம்பினுண் வில்லி யானைச் சுடரதால் விழித்தெ ரித்தான்
... பாகம் பெற்ற

விபீஷணன் சொல்லல்

வுஞ்சி... ...ரம் னஸ்திரக் காண்டீ பத்தை
பஞ்சுபோல் புகுந்து ராமன் பருவாளி யதனிற் றோ...
கெஞ்சியே யவனை வாழ்த்தித் தனக்குள்ள கெருவங் ...
நெஞ்சினி லறிவாய் சொன்னேன் னீவிடு மின்னை யாங்கே.

இராவணன் சொல்லல்

நன்னய மொழியா லங்கு நாரியை யவன்பாற் சேர்த்து
சொன்னதும் புகழுங் கொண்டாற் றுரோகீ பெறுவ தென்னோ
அன்னமு தளித்து நாளு மன்பனாய்க் காத்தாற் கிந்த
வின்னமாஞ் செய்கை லோகம் வீழினும் வகைநீங் காதே. 72

விபீஷணன் சொல்லல்

பின்வருங் குறைமுன் னாய்ந்து பேசிலோ வசையென் றுற்றீர்
வன்பெருங் கும்பன் சித்தன் மாபலர் நாமுங் கூடில்
என்குறை வெல்வோ மென்ன வெண்ணிநீர் சேனை யாவும்
மின்கதிர் வீசு ஞாயிர் முன்பனி வெருளுங் காணே. 73

இராவணன் சொல்லல்

பனிக்குலஞ் சிறுவன் சேனை பானுவின் வேந்தன் சேனை
சினக்கடும் புலிக்கு வந்து சிறுபூனை யாமோ யின்று
வனத்திரு முயலை யோர்ந்து மாபல மொடுங்கு வேனோ
வனத்தினில் விகற்ப மெண்ணி மாதவன் பக்கஞ் சேரே. 74

விபீஷணன் சொல்லல்

கடுவரீ செய்வ தென்றாய் காகுத்தன் சரம்போல் லாது
அடியுடன் வேருந் தூரு மருங்கனி யிளங்காய் பிஞ்சும்
முடியையு மிழந்து நாளை முனைக்களம் வெருங்கை யோடே
படிமிசை நிற்கும் போதே பாங்கியை யனுப்பு வாயே. 75

இராவணன் சொல்லல்

அனுப்பிடச் சிறுவ னாளை யஸ்திரங் கைக்கொண் டிங்கு
துனிப்பெரும் வலிமை யாலே கட்டிடச் செய்வ தன்றி
சினப்பெரு வீரர் மற்றச் சேனையு மடியு மென்றாய்
வனத்திருங் கிளியை யன்று மனமகிழ்ந் தனுப்பு வேனே. 76

விபீஷணன் சொல்லல்

...கபெருங் காங்கள் மூன்று மாபலச் சேனை யாருஞ்
...யறுத் திட்ட வாறு தெறிந்திட வறிந்தி ருந்தும்
...கசெய்து ராமன் சேனை நமக்கி...

இராவணன் சொல்லல்

...தி ராமனையு முன்னையுநான்
...தினால் குறைமுடிக்க நானிருப்பேன்
...மென்றும் வாழ்ந்திருக்க நிச்சயித்து
...ர்த்தைசொன்னா யீசனுண்டு போடாநீ. 64

விபீஷணன் சொல்லல்

O-18H,I
N51

மண்ணும் விண்ணு நின்றிரங்க மாமேரு நெய்யுருக
கண்ணிரண்டுந் தணல்வீசக் கருமேனி மயிற்பொடிப்ப
வொண்ணுந்தெரி யாமலெக்கு முய்யாதோர் வாளியினால்
வெண்ணிடுவ ரண்ணாவென் மெய்யுரையை நம்பெனவே. 65

இராவணன் சொல்லல் 113801

உன்னுரையை நம்புதற்கவ் வுற்றமொழி யேதறிவாய்
பின்னுவரு நலந்தீது பெருமைசிறு மைதனையும்
புன்னைமலர் சூடுமையன் பூதியணி வானருளால்
வின்னமுற னுன்கொள்ளேன் வினுரையேன் போடாநீ. 66

விபீஷணன் சொல்லல் - வேறு

மத்தகக் கோடு தன்னை மார்பணிந் திட்ட தாலும்
அத்தனுங் கும்பன் சித்த னஸ்திர வலியி னாலும்
முத்தனா ருறையும் வெற்பை முன்கையி லேந்த லாலும்
சற்றெண்ண மிலலா வார்த்தைத் தாழ்வரு நாளைக் காணே. 67

இராவணன் சொல்லல்

பனையொன்று பாளை ரண்டு பாலொன்று பசுக்கா யொன்று
கனமுட னுலகிற் கண்ட காட்சிபோ லிருவ ருக்குள்
முனைபெறும் வீர மொன்று முனிவிலாப் பேடி யொன்றாய்
வனமிரு முயலை யொத்த மதலையர்க் கஞ்சி னேமே. 68

விபீஷணன் சொல்லல்

மண்டல விண்ட லங்கண் மாதல மூன்று நாளை
கண்டுகை கூப்பு முன்றன் களிப்பெலாங் கவிழ்க்க வேண்டி
எண்டிசை போற்று ராம னிணையடி துயரத் தாலே
கொண்டான் வாளுந் தோற்றுக் குருடன்கோ லாவாய் காணே. 69

இராவணன் சொல்லல்

...த்தனை யுரைத் திட்டாலு மிச்சித்த கனியை நீக்கி
மற்றொரு காயை யுண்ண மனமொவ்வா மொழியைப் போல
... கமுங் கோழை